# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(02.07.2022 முதல் 06.07.2022)

அறிக்கை எண்: 52/2022 தேதி: 01.07.2022

### அரியலூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 36 °செ முதல் 37 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 °செ முதல் 27 °செ ஆகவும் பதிவானது.

### அரியலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (02.07.2022 முதல் 06.07.2022)

| கடந்த வார வானிலை (28.06.2022 முதல் 30.06.2022) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (02.07.2022 முதல் 06.07.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 28/06 | நாள்-2 29/06 | நாள்-3 30/06 | தேதி | நாள்-1 02/07 | நாள்-2 03/07 | நாள்-3 04/07 | நாள்-4 05/07 | நாள்-5 06/07 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 4 | 3 | 0 | 0 | 0 |
| 36 | 37 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 37 | 37 | 37 | 37 | 36 |
| 27 | 27 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 27 | 27 | 27 | 27 |
| 6 | 5 | 6 | மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 4 | 3 | 3 |
| 64-41 | 63-44 | 63-63 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 65-50 | 65-50 | 65-50 | 65-50 | 65-50 |
| 22 | 22 | 30 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 14 | 14 | 14 | 14 | 14 |
| மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றின் திசை | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

### அரியலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 02.07.2022 மற்றும் 03.07.2022 ஆகிய தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36 °செ முதல் 37 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 °செ ஆகவும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 65 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | காவேரி டெல்டா பகுதிகளில் வரும் நாட்களுக்கு லேசான மழை பெய்யும் என்பதால் விவசாயிகள் தங்கள் வயல்களில் உள்ள பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதை ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு தவிர்க்கலாம் அல்லது மிதமான அளவில் தண்ணீர் பாய்ச்சலாம் |

| | | |
|---|---|---|
| நெல் | | பயிர் நடவு செய்த 3 முதல் 5 நாட்களுக்குள் களை முளைப்பதற்கு முன் தெளிக்கும் களைக்கொல்லிகளான பூட்டாகுளோர் 50 இ.சி 1.0 லிட்டர் (அ) அனிலோபாஸ் 30 இ.சி 500 மி லி (1 ஏக்கர்) இவைகளில் ஏதாவது ஒன்றை 20 கிலோ மணலுடன் கலந்து சீராக தூவ வேண்டும். களைக்கொல்லி இடும் போது வயலில் 2 செ.மீ அளவிற்கு நீர் இருக்கவேண்டும். களைக்கொல்லி இட்டபின் 2 நாட்களுக்கு வயலுக்கு நீர் பாய்ச்சவோ வடிக்கவோ கூடாது. |
| நெல் | | குறுவை நெற்பயிரில் 20 - 25 நாட்களுக்குள் ஒரு கைக்களை எடுக்கவும். |
| கால்நடைகள் | மாடு | விவசாயிகள் கறவை மாடுகளுக்கு போதிய அளவு தாது உப்பு கலவையை அளிக்கலாம் |

**குறுஞ்செய்தி**

குறுவை நெற்பயிரில் 20 - 25 நாட்களுக்குள் ஒரு கைக்களை எடுக்கவும்.

**இயக்குநர்**